P'RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE : FRANCE

www.padippakam.com



# அன்பார்ந்த தமிழ் நெஞ்சங்களே!

தமிழ்ஈழ விடுதலைப் புலி இயக்க ஆதரவாளர்களைக் குறிப்பாகவும் தமிழ் 'ஈழ மக்களைப் பொதுவாகவும் அதிர்ச்சிக்குள்ளாக்கிய ஒரு நிகழ்வு பற்றிய விபரங்கள் கடந்த சில காலமாகத் துணுக்குத் துணுக்காக நறுக்கு நறுக்காக வெளிவந்து கொண்டுருக்கின்றன. சுமார் இரண்டாண்டு காலமாகவே தலைவர் பிரபாகரனுக்கும் பிரதி — தலைவர் மாத்தையாவுக்கும் இடையில் பிரச்சனை என்ற செய்தி பரவலாக அடிபட்ட ஒன்று. பின்னர் அண்மைக் காலங்களில் "மாத்தையா கைது மாத்தையா ஆதரவாளர் கைது. மாத்தையா மரணம் என்பன போன்ற பல்வேறு செய்திக் கதைகள் இலங்கை. இந்தியப் பத்திரிகைகளில் வெளிவந்தன. சரியான செய்திகளை உரிய முறையில் பிரசுரிப்பதில் தனக்கென ஒரு பாணியை வகுத்துக் கொண்ட "செந்தாமரை" இப்பிரச்சனையை நிதானத்துடனும் பொறுப்புணர்வுடனுமே அணுகியது. எந்தவொரு இயக்கத்தையும் சாராது அதே வேளை தமிழ் மக்களின் உரிமை மீட்புப் போருக்குத் தனது பூரண ஆதரவை வழங்கி வரும் "செந்தாமரை

இந்த விவகாரம் குறித்து அவசரக் கோலமாக செய்தி வெளியிடுவதைத் தவிர்த்துக் கொண்டது. எந்தவொரு தனிமனிதனின் முக்கியத்துவத்தை விட தமிழினத்தின் தலைமைச் சக்தியாக தற்போதைய சூழ்நிலையில் விளங்கும் விடுதலைப் புலிகள் இயக்கம் அனாவசியமாகப் பிளவுபடக் கூடாது என்ற கருத்திற்கு நாமும் உடன்பட்டோம். இதனால் பாரதூரம் மிகுந்த இப்பிரச்சனை பற்றி மிகவும் திட்டவட்டமான தகவல் கிடைக்கும் வரை பொறுமையாக இருந்தோம். சிறுகச் சிறுகச் சேர்த்த தகவல்களை ஒவ்றுக்குப் பலமுறை சரிபார்த்து பின்னரே இங்கு விபரமாகத் தொகுத்தளிக்கிறோம். மாத்தையா கைது பற்றி வன்னிப்பிராந்திய இலங்கை இராணுவ தளபதி பிரிகேடியர் கலுப்பஹனை நடத்திய பத்திரிகையாளர் மகாநாடு பற்றியும் பிரதி தலைவராக மாத்தையா ஒருபோதும் இருக்கவில்லை என்றும் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் கொழும்புப் பத்திரிகைகளிடம் தெரிவித்தது பற்றியும் செய்திகளாக ஏற்கனவே "செந்தாமரை"யில் பிரசுரித்துள்ளோம். இது தவிர பிரதி தலைவர் என்றொரு பதவி இருக்கவில்லை என்று திரு. பாலசிங்கம் கூறியது உண்மைக்கு முரணானது என்றும் பிரபாகரன் மாத்தையா ஆகியோருக்கிடையில் என்ன பிரச்சனை என்றும் அலசி, ஆராய்ந்து கட்டுரை ஒன்றை முன்னைய "மஞ்சரி" ஒன்றில் பிரசுரித்திருந்தோம். சென்ற இதழ் "மஞ்சரி" யிலும் மாத்தையாவுக்குப் பிரச்சனை என்ற கருத்தை வலியுறுத்தும் செய்தித் தொகுப்பு ஒன்றைப் பிரசுரித்திருந்தோம். அதில் கொழும்புப் பத்திரிகையாளர்களிடம் திரு. பாலசிங்கம் தெரிவித்த அல்லது சூசகமாக உணர்த்திய தகவல்களைப் பிரசுரித்திருந்தோம். இதன் மூலம் "வரியிடை வாசிப்பு" (reading between the lines) செய்த வாசகர்கள் மாத்தையா விவகாரம் பற்றி மேலும் சிலவற்றை உய்த்துணர முடிந்தது.

இந்த "மஞ்சரி" யில் மாத்தையா விவகாரம் பற்றி நாம் பொறுமையாகவும் பொறுப்புணர்வுடனும் சேகரித்த தகவல்களை வெளியிடுகிறோம். தற்போது தமிழ்ஈழப் பகுதியில் பத்திரிகையாளர்கள். மதப் பெரியார்கள். கல்விமான்கள். அரசாங்க உத்தியோகத்தர்கள் முன்னாள் பிரஜைகள் குழுப் பிரதிநிதிகள் மற்றும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நெடுநாளைய ஆதரவாளர்கள். பழம் பெரும் ஆர்வலர்களிற் பலரை புலிகள் இயக்கத் தலைவர் திரு. பிரபாகரன் சிறு. சிறு குழுக்களாகச் சந்தித்து வருகிறார். அவர்களிடம் மாத்தையாவுக்கெதிரான 10 தாள் கொண்ட குற்றப் பத்திரிகை வாசித்துக் காண்பிக்கப்படுகிறது. விசாரணைகள் நடக்கின்றன என்றும் அவை முடிவடைந்ததும் விபரங்கள் பகிரங்கமாக்கப்படும் என்றும் திரு. பிரபாகரன் கூறியுள்ளார்.

திரு. பிரபாகரனின் இந்த மேற்படி நடவடிக்கை எம்மைப் பொறுத்த வரை சில ஆதாரபூர்வமான தகவல்களைத் திரட்ட பெரிதும் உதவியுள்ளது. அதுவரையில் பலருடனும் இது பற்றித் தொடர்பு கொண்டபோது "கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர் என்ற நிலையைத் தான் நாம் எதிர் கொண்டோம். ஆனால் இப்போது தகவல் பெறுவது மேலும் சுலபமாகியுள்ளது. விரைவில் விடுதலைப் புலிகள் இயக்கம் உத்தியோகபூர்வமாக இது பற்றி அறிவிக்கையில் மேலும் விபரங்களை எதிர்பார்க்கலாம். நிலைமை இன்னும் தெளிவடையலாம்.

மேலும் ஒரு குறிப்பு. ஷியாம் தெக்வானி என்ற "இந்தியா டுடே" பத்திரிகையாளர் 1987ம் ஆண்டு இந்தியப் படைகளுக்கும் புலிகளுக்கும் இடையில் நடந்த சண்டையின் போது யாழ்ப்பாணத்தில் நின்றார். குளப்பிட்டிச் சந்தியருகில் புலிகள் ஒன்று மாறி ஒன்றாகப் பந்தயம் கட்டி இந்தியச் சிப்பாய்களை ஒருவர் பின் ஒருவராகச் சுட்டு வீழ்த்தியதை நேரடியாகக் கண்டவர். பத்திரிகையாளர் என்ற முறையில் அது பற்றி விபரமாக எழுதிய ஷியாம் தனது சொந்த நாட்டுப்படைகள் கண்முன்னால் சுட்டு வீழ்த்தப்படும் அவலக் காட்சி குறித்து இந்தியன் என்ற முறையில் இப்படியான காட்சியை என் வாழ்நாளில் ஒருபோதும் நான் காண விரும்பவில்லை" (As an Indian, I never want to see such a scene in my life again)என்று குறிப்பிட்டார்.

இந்த மாத்தையா விவகாரம் பற்றித் தகவல் எழுதும்போதும் அத்தகைய மனோநிலை தான் நிலவுகிறது. நன்கு பழக்கமான ஒரு நண்பரை. பன்னெடுங்காலமாக விடுதலைப் புலிகளின் வீரப்போரில் ஈடுபட்டு வந்த ஒருவரை. இத்தகைய பெரும்பழி சூழ்ந்திருப்பதையும் இது குறித்து எழுத நேரிடுவதும் மனச் சஞ்சலத்தை அளிக்கின்றது. இந்தியச் சதிக்கு மாத்தையா உடந்தையாயிருந்திருப்பாரா? பிரபாகரனையே கொல்வதற்குத் துணிந்திருப்பாரா? பிரபாகரனை ஒழித்துவிட்டுத் தலைவனாகும் முயற்சியில் மாத்தையா இறங்கியிருப்பாரா? என்பது போன்ற கேள்விகள் தான் மனதை வாட்டுகின்றன. தமிழினத்தின் விடுதலையை ஆத்மார்த்தமாக நேசிக்கும் ஒவ்வொரு தமிழ் உள்ளத்தையும் இந்த வேதனை வாட்டும் என்பதை உணரக்கூடியதாக உள்ளது.

இன்றைய யதார்த்தநிலையில் தமிழினத்தின் தலைமைச் சக்தியாக, தலையாய இராணுவச் சக்தியாக விளங்குவது விடுதலைப் புலிகளே. டி.பி. விஜேதுங்க ஆட்சியேற்ற பின் முன் எப்போதுமில்லாத வகையில் சிங்களப் பேரினவாதம் கோலோச்சுகிறது. முன்னைய ஆட்சியாளர்கள் ஒரு பாவனையாகத்தானும் குறிப்பிட்ட / இனப்பிரச்சனை உள்ளது" என்ற கோட்பாட்டினை நிராகரித்து விட்டு "பயங்கரவாதப் பிரச்னை" தான் உள்ளது என்று பகிரங்கமாகவே எக்காளமிடுகிறார் டிங்கிரி பண்டா விஜயதுங்க. இந்நிலையில் விடுதலைப் புலிகள் பெலவீனமடைந்தால் இயக்கத்தின் கட்டுக்கோப்பு சிதறுண்டால், உறுப்பினர்கள் உத்வேகம் இடிந்தால் ஏற்படக் கூடிய சேதமிவு தமிழ் ஈழ உரிமைப் போராட்டத்தைப் பல தலைமுறைகளுக்குப் பின்னால் தள்ளி விடக் கூடும். அதுவும் சென்ற ஆண்டு கொப்பேக்கடுவை, விமலரத்தின மறைவிலிருந்து அடுக்கடுக்காக அடுத்தடுத்துப் பாரிய வெற்றிகளை விடுதலைப் புலிகள் குவித்த வண்ணமிருக்கின்றனர். இப்படியான நிலையில் "உடன் பிறந்தே கொல்லும் வியாதி" தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பீடிப்பது மிக. மிகப் பிரதி கூலமான ஒரு செயற்பாடே.

ஆயினும் கார்முகிலில் ஒரு வெள்ளிவிளிம்பாக ஒன்றைச் சொல்லலாம். மாத்தையா பிரச்சனை இதுவரை புலிகள் இயக்கத்தைப் பாரிய அளவில் தாக்கமடையச் செய்ததாகத் தெரியவில்லை. பொதுமக்களும் இதனால் பெருங்கலக்கமடைந்ததாகவும் . தெரியவில்லை. இராணுவ ரீதியாகப் புலிகள் மென்மேலும் புதுப் பலத்துடன் தான் போரிடுகின்றனர். ஆனால் அரசியல் ரீதியாக மிக ஆழமான பின்விளைவுகளைக் கொண்டு வரக் கூடிய ஒன்று இந்த மாத்தையா விவகாரம். "வாளின் மேல் மாதவம்" என்ற நிலையில் தான் பிரபாகரனும் இதை அணுகி வருகிறார் என்பது புலப்படுகிறது. வழமைக்கு மாறாகப் பல்வேறு மட்டங்களில் அபிப்பிராயம் உருவாக்கக் கூடியோரை அழைத்து இது பற்றி விரிவாக எடுத்துரைப்பதும் விசாரணைகள் முடிவடைந்ததும் விபரங்கள் பகிரங்கமாக வெளியிடப்படும் என்றும் திரு. பிரபாகரன் வாக்குறுதி அளித்துள்ளதும் நல்ல அறிகுறிகளே.

ஏற்கனவே தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கெதிரான பேரேடுகளும். சிற்றேடுகளும் மாத்தையா விவகாரம் பிரபாகரனின் பதவிவெறியின் வெளிப்பாடு. அதிகார போதையின் செயற்பாடு என்பது போன்று கருத்துக்கள் வெளியிட்டு வருகின்றன. இந்நிலையில் பிரபாகரன் இயக்கத்தின் எதிர்கால நலனை முன்னிட்டும் தனிப்பட்ட முறையில் தனக்கெதிராக தொடுக்கப்படும் அபவாதப் பிரசாரத்தை முறியடிக்கவும் ஓர் அக்கினிப் பரீட்சைக்கு வழிவகுப்பது நல்லதென்றே நினைக்கிறேன். மாத்தையாவுக்கெதிரான குற்றச்சாட்டுகள் குறித்து ஒரு நீதிவிசாரணை நடத்த வேண்டும். இந்த விசாரணையில் மாத்தையாவுக்கு உரிய முறையில் நீதி வழங்கப்பட்டது என்ற நம்பிக்கை தமிழ் மக்களுக்கு வர வேண்டும். நீதி வழங்கப்பட்டால் மாத்திரம் போதாது. அது வழங்கப்பட்டது என்பது போன்றும் புலப்பட வேண்டும். (Justice should not only be done, but also should appear to have been done) என்பது ஆன்றோர் வாக்கு. நீதியை முன்னிட்டும் புலிகளின் எதிர்கால நலனை முன்னிட்டு இந்நடவடிக்கை அவசியம் என்றே வலியுறுத்த வேண்டியுள்ளது.

அத்துடன் இவ்வாறான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் போது மற்றொரு முக்கிய விடயமும் குறித்தும் ஒளிப்பொட்டு பாய்ச்சப்பட்டு விடும். அது இந்தியாவின் ரகசிய உளவுப் பிரிவுகளின் பங்களிப்புக் குறித்தது. விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குள் ஊடுருவவும் இயக்கத்தைப் பிளவுபடுத்தவும் பிரபாகரன் — மாத்தையாவுக்கு இடையில் வேற்றுமையை வளர்க்கவும் இந்திய உளவு புலனாய்வு அமைப்புகள் எடுத்த முயற்சிகள் கொஞ்ச நஞ்சமல்ல எத்தனையோ தடவை முனைந்தாலும் கிடைத்தது தோல்வியே. ஆனால் இம்முறை? உண்மையில் மாத்தையா நிரபராதியானால் பிரபாகரனுக்கும் அவருக்குமிடையில் ஒரு பிளவை ஏற்படுத்துவதில் "றோ" வெற்றி பெற்று விட்டது. என்று கூறவேண்டும். ஆனால் உண்மையில் மாத்தையாவுக்கு சதியில் சம்பந்தமிருந்தால் இந்த அளவில் ச முயற்சி கண்டு பிடிக்கப்பட்டதை தலைக்கு வந்து தலைப்பாகையுடன் போன கதையாகவே எடுக்க வேண்டியுள்ள எது எப்படி இருந்த போதிலு இப்பிரச்சனையை பிரபாகரன் மாத்தை பிளவு என்ற ரீதியில் நோக்காமல் இந்தி சதியின் அம்பலம் என்று நோக்குவ கூடுதல் நன்மை தரும்.

## இறுதியில் ஒரு குறிப்பு

வழக்குகள் விசாரணையில் இ க்கும்போது அவற்றை சப் ஜுடி (Sub-Judice) என்று கூறுவார்க நீதிமன்றம் ஓர் தீர்ப்புக்கு வரும் மு அவ்வழக்கு பற்றி எவரும் கருத் அல்லது அபிப்பிராயம் தெரிவிப் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய நடைமு அன்று. அது நீதிமன்ற நிபந்தன க்குரிய குற்றமாகவே கருதப்படு பாராளுமன்றத்தில் கூட அது பற் பேசவோ கருத்துக் கூறவோ முடியாது.

மாத்தையா விவகாரம் தற்போ ஞாக்குறை தமிழ் ஈழநீதித்துறையின்- னுள்ள வழக்கு விசாரணை போ துதான். எனவே "மஞ்சரி" யும் இவ் யத்தில் அத்தகைய Sub-Judi கோட்பாட்டை தான் சுய கட்டுப்பாட்டு கடைப்பிடிக்கிறது.

மாத்தையா விவகாரம் பற்றி தெளிவான பின்னணியை விளக் விதத்தில் தான் இவ்விதழில் வெளிய செய்திக் கட்டுரை அமைந்திருக் நாம் சேகரித்த விடயங்களை நம் பிக்கையுடன் (in good faith) இ பிரசுரிக்கிறோம்.

இவை சரியா. பிழையா தீர்ப்புக் கூறுவது தற்போதைக்கு எல்லைக்கு அப்பாற்பட்டது. நிகழ் முக்கிய பாத்திரங்கள் பற்றி அபிப்பி கூறுவதையும் இது உண் பொய்யா என்பது பற்றி தெரிவிப்பதும் நாம் இப்போதை தவிர்க்கப் போகும் ஒன்று. சந்தர்ப்பத்தில் தேவை நிதான பொறுப்புணர்வும். விசாரணை முடிந்து புலிகள் தலைமைப் விடயத்தைப் பகிரங்கப்படுத்தும் உண்மை ஒரு நாள் வெளியாகும். உள்ளங்கள் எல்லாம் தெளிவ அதுவரையில் இவ்விடயத்தை விபரமான செய்தியாகவே டுகிறோம்.

இப்படிக்கு
அன்புடன்
டி.பி.எஸ். ஜெயராஜ்

மஞ்சரி கிறிஸ்மஸ் மலரில் விளம்பரம் செய்யுங்கள்
கனடாவில் வெளிவரும் தமிழ்ப் பத்திரிகைகள் விற்பனையில் குறுகிய காலத்தில் அபார சாதனை படைத்துள்ள உங்கள் அபி
"மஞ்சரி" எதிர்வரும் 20.12.93 இதழ் அதிக பக்கங்களுடன் கிறிஸ்மஸ் மலராக வெளிவருகிறது. விசேட மலிவுக் கட்டண
"மஞ்சரி"யில் விளம்பரம் செய்ய (416) 412-1474 இலக்கத்தில் விபரங்களைப் பதிவு செய்யுங்கள்